# இஸ்லாமிய ஆடைக்கலாச்சாரமும் முஸ்லிம் இளம் பெண்களின் இன்றைய நிலையும்: அக்கரைப்பற்று மாநகரசபையினை மையப்படுத்திய ஆய்வு

**Jazeel.J.M. (1), Sabra.M.A (2), Marsafa A.I.F(3), Mohamed Habras.A.H(4)**

[1,2,3&4] Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka

jmjazeel003@gmail.com, alisabra@yahoo.com, sajithmarsafa@gmail.com,

mohamedhabras95@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாமானது ஆடைக்கலாச்சாரத்தில் உடலியல் நிலைமைகளுக்கு ஏற்ப பாதுகாப்பான ஆடைமுறைகளை வழங்கிய ஒரு பூரணத்துவமான மார்க்கமாகும். பெண்களின் ஆடை விடயத்தில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது இதனை வலியுறுத்தியே பின்வரும் ஹதீஸ் அமைகின்றது, அதாவது ''ஓ அஸ்மாவே! ஒரு பெண் பருவமடைந்து விட்டாளேயானால் அவள் மணிக்கரத்தையும், முகத்தையும் தவிர தம் உடலின் எந்தவொரு பாகத்தையும், அந்நிய ஆடவர் முன்திறந்து காட்ட அனுமதி இல்லை'' ஆதாரம் அபுதாவூத். அந்த வகையில் இளம் முஸ்லிம் பெண்களிடத்தில் ஆடைக்கலாச்சார சீரழிவினையும், அதிலிருந்து மீளுவதற்கான வழிமுறைகளையும் பரிந்துரைப்பது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். பண்புரீதியான இவ்வாய்வானது ஆய்வுக்குறிக்கோளினை அடைய இஸ்லாத்தின் மூலாதாரங்களான அல்குர்ஆன், ஹதீஸ் தற்கால முஸ்லிம் சிந்தனையாளர்களின் எழுத்துக்கள், நூல்கள், சஞ்சிகைகள், மற்றும் வினாக்கொத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களைக் கொண்டு பகுப்பாய்வு செய்து பெறப்பட்ட முடிவுகள், மார்க்கஅறிஞர்கள் சமூக நலன் விரும்பிகள் போன்றோருடன் மேற்கொண்ட கலந்துரையாடல் என்பவற்றை மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் இஸ்லாமிய ஆடை அணிகின்ற நோக்கம் புறக்கணிக்கப்படல், ஆடம்பரமான ஆடைக்கலாச்சாரம், இறுக்கமான ஆடைமுறைகள், மெல்லிய ஆடைவகைகள், கவர்ச்சிகரமான ஆடைவகைகள், என்பன இஸ்லாமிய ஆடைக்கலாச்சாரத்தினை பாதித்து இளம் முஸ்லிம் பெண்களை பாரியளவில் சீரழித்துக் காணப்படுகின்றன, என்பது இவ்வாய்வின் முடிவுகளாக பெறப்பட்டுள்ளன. அதேவேளை இவர்களை மீட்டெடுப்பதற்கு சிறியவயதிலே இஸ்லாமிய சூழலில் பெண்பிள்ளைகளை வளர்த்தல், பாதுகாவலர்களான பெற்றோர்கள், சகோதரர்கள் தங்கள் பெண்பிள்ளைகளின் ஆடைக்கலாச்சாரத்தில் கண்ணும் கருத்துமாக இருத்தல், இஸ்லாமிய ஆடையின் அவசியத்தை பற்றிய விழிப்புணர்வை இளம் பெண்கள் மத்தியிலும், விற்பனையாளர்களிடமும் ஏற்படுத்தல், இஸ்லாமிய ஆடைக்கலாச்சாரத்தை மீறுவதனால் ஏற்படும் விளைவுகள் மற்றும் இஸ்லாமிய ஆடைக்கலாச்சாரம் சம்பந்தமான அறிவுரை நிகழ்வினை அடிக்கடி நிகழ்த்துதல் போன்றன பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்**: ஹதீஸ், குர்ஆன், இஸ்லாம், மார்க்கம்.

**அறிமுகம்**

இஸ்லாம் மார்க்கமானது உலக மக்கள் அனைவரையும் நெறிப்படுத்த வந்த பூரணத்துவமிக்க ஒரு மார்க்கமாகும். இஸ்லாத்திற்குட்பட்டு, மனிதனால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்துவிடயங்களையும் இபாதத்தாகவே கருதுகின்றது. இதனடிப்படையில் ஒவ்வொரு விடயத்திற்கும் வழிகாட்டுகின்ற இம்மார்க்கம் மனிதனுடைய ஆடை விடயத்திலும் விசேட கவனம் செலுத்துகின்றது.

அந்தவகையில் இஸ்லாமிய ஆடையானது மரபு ரீதியான ஆடை மற்றும் நவீனத்துவ ஆடை என வரையறுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 1978ம் ஆண்டு 2ம் குடியரசு யாப்பில்

ஏற்படுத்தப்பட்டிருந்த திறந்த பொருளாதார கொள்கையின் மூலம் இலங்கையிலிருந்து, முஸ்லிம் நாடுகளான மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புகளுக்குச் சென்றவர்களின் மூலம் இலங்கைக்கு ஹபாயா மற்றும் ஹிஜாப் போன்ற இஸ்லாமிய ஆடைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. இவை இஸ்லாமிய பெண்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் மார்க்கத்தை விட்டு விலகாமல் இஸ்லாமிய உணர்வை மேம்படுத்தக் கூடிய ஒன்றாகவும் உள்ளது.

இன்று உலகளாவிய ரீதியில் ஆடைக்கலாசாரமானது பல வகையான வடிவங்களை பெற்றுக்காணப்படுகின்றது. அவைகளில் டெனிம், டொப், சல்வார் வகைகள், ஹிஜாப், சாரி வகைகள், சிலம் பிற் ஜீன்ஸ், ஹபாயா, சறாறா, ஸ்கேட் வகைகள் போன்ற பலவகையான ஆடைவகைகள் மற்றும் நவீனரக ஆடம்பர ஆடைவகைகள் வலம்வந்து கொண்டிருக்கின்றன. இவைகளில் அனேகமான ஆடைவகைகளானவை மேற்கத்தேய ஆடைவகைகளாகவும் பிறமத கலாசார ஊடுருவல்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றன. இன்னும் அதிகமானவைகள் கவர்ச்சிகரமான வடிவங்களைக் கொண்டவைகள் முஸ்லிம் இளம் பெண்களுக்கிடையே வெகுவாக பரவியுள்ளது.

இந்த ஆடைவகைகளில் ஹிஜாப் மற்றும் ஹபாயா போன்ற ஆடைகள் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து ஏனைய நாடுகளுக்கு பரவியுள்ளது. அந்த வகையிலேயே தான் இலங்கையிலும் இவ் ஆடைகளின் தாக்கமானது காணப்படுகின்றது. இதற்கு காரணமாக வேலைவாய்ப்புக்காக சென்றமை, வியாபாரம் மற்றும் சுற்றுலா போன்ற காரணங்களின் மூலமாக இவ் ஆடைக்கலாசாரமானது இலங்கை முஸ்லிம் இளம் பெண்கள் மத்தியில் பரவியுள்ளது. இவ்வாறு பரவிய ஆடைக்கலாசாரமானது இன்றைய காலத்தில் மிகவும் மோசமான ஒரு நிலையல் உள்ளது. எவ்வாறாயின் தங்களினுடைய அவ்றத்துக்களை பிற ஆடவர்கள் இலகுவாக கண்டுகொள்ளும் அளவிற்கு அதில் மாற்றங்களை கொண்டுள்ளனர்.

ஆந்த வகையிலேயே தான் இலங்கையில் அதிகளவு முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்தினை மையமாகக் கொண்ட இவ்வாய்வுப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம் இளம் பெண்களின் நிலையும் இவ்வாறாக சீரழிந்து காணப்படுகின்றது. இவற்றினை சீர் செய்கின்ற நோக்கிலும், அவர்களை இஸ்லாமிய ஒழுக்கநெறியின் பால் அழைக்கின்ற நோக்கிலும் இவ்வாய்வானது மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதனடிப்படையிலும் இஸ்லாம் பின்வருமாறு கூறுகின்றது. ‘‘மேலும் (நபியே) மு.ஃமினான பெண்களிடம் கூறும் அவர்கள் தங்களுடைய பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளட்டும் தங்களது அழகை வெளியில் காட்டாதிருக்கட்டும். அதிலிருந்து தாமாக வெளித் தெரிகின்றவற்றைத் தவிர, மேலும் தங்களுடைய மார்புகள் மீது முந்தானைகளைப் போட்டுக் கொள்ளட்டும்’’ (அந்நூர்: 31)

அந்தவகையில் பெண்களின் முகம், இருகரம் தவிர்ந்த அனைத்தும் அவ்றத் என்பதனை இஸ்லாம் கூறுகின்றது. இன்னும் இவற்றை மறைக்கச் சொல்லி இஸ்லாம் பல இடங்களில் கூறுகின்றது. அவைகளில் பெண்களின் ஆடை அலங்காரமானது ஆண்களைக் கவரக்கூடிய வகையில் அமையக் கூடாது என்றும் அந்நிய ஆடவர்களின் பார்வைக்குட்படாதவண்ணம் இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறெல்லாம் இஸ்லாமிய கட்டுக் கோப்புக்குள் பெண்களை வரையறுத்த இஸ்லாமிய ஆடைக் கலாச்சாரமானது தற்காலத்தில் பல பரிணாமங்களைப் பெற்று மேற்கத்தேய கலாச்சாரத்தை உள்ளடக்கிய, இஸ்லாமிய சட்டதிட்டங்களை மீறுகின்ற வகையில் காணப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்**

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டது.

- அக்கரைப்பற்று மாநகரசபையில் இளம் பெண்களின் ஆடைக் கலாச்சாரத்தின் தற்போதய நிலைமைகளை காணல்.
- இஸ்லாமிய ஆடைக்கலாசார ஆடை முறைமையின் மாற்றத்துக்கான காரணங்களை கண்டறிதல்.
- இஸ்லாமிய ஆடைக்கலாச்சாரம் பற்றிய தெளிவினை இளம் பெண்களுக்கு ஏற்படுத்துதல்.
- இஸ்லாமிய ஒழுக்க நெறியின் பால் இளம் பெண்களின் ஆடைக் கலாச்சாரத்தில் மாற்றத்தினை ஏற்படுத்துதல்.

**ஆய்வுப் பிரதேசம்**

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள கரையோரப் பிரதேசமாக அக்கரைப்பற்று காணப்படுகிறது. வடக்கே அட்டாளைச்சேனை அமைந்துள்ள தைக்கா நகரையும், தெற்கே மொட்டையா மலையைக் கொண்ட வயல் பிரதேசத்தையும், கிழக்கே வங்காள விரிகுடாவையும், மேற்கே இலுக்குச்சேனை அமைந்துள்ள எட்டாங்கட்டையும் எல்லைகளாகக் கொண்டு இது விளங்குகின்றது. இங்கு முஸ்லிம், தமிழ், சிங்கள மக்கள் வாழ்கின்ற பல்லினத்தை அடிப்படையாகக் கொண்ட பிரதேசமாக காணப்படுவதோடு ஒவ்வொரு இனத்தவர்களுக்கும் உரிய வணக்கஸ்தலங்களையும் பெற்றுக் காணப்படுகின்றது. இங்கு பெரும்பான்மையினராக முஸ்லிம் மக்கள் வாழ்வதோடு 2013 ம் ஆண்டு அக்கரைப்பற்று மாநகரசபையாக்கப்பட்டதிலிருந்து "`உயர்ந்த மண்" எனவும் சிறப்புப் பெற்றுள்ளது.

**லக்கிய மீளாய்வு**

Anneliess Moors என்பவர் தனது ஆய்வில் இஸ்லாமிய பெண்கள் பெரிதும் தங்களது தலையை மறைக்கின்ற ஸ்காப் (Head scarf) இனை அணிவதும் விட்டு தூரமாகின்றவர்களாக உள்ளனர் இதன் காரணமாக இஸ்லாமிய ஒழுக்கமானது குறைந்து கொண்டு செல்கின்றவாக உள்ளது என்று கூறுகின்றார். இன்னும் இவ்வாறு இடம் பெற காரணம் உலகமயமாதலும் அதன் போக்கிற்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற வகையில் இஸ்லாமிய பெண்களும் உள்ளனர் எனவும் கூறுகின்றார். இதனால் இஸ்லாமி பெரும்பான்மையான நாடுகளில் சமுதாய நீர் கேடுகளும் இடம் பெறுகின்றன எனவும் கூறுகின்றார்.

Ayathullah Murthza Mutahhari என்பவர், "இஸ்லாமிய ஹிஜாப்" எனும் புத்தகத்தில் "பெண்கள் தம்மை மூடி மறைத்துக் கொள்ளும் படி கூறும் கட்டளையானது பெண்கள் மீது மட்டுமே விதிக்கப்பட்டுள்ளதன் காரணம் தம்மை வெளிக்காட்டிக் கொள்ள வேண்டும் என்பது பெண்களுக்கு மட்டுமே உரித்தானதொரு குணாதிசயமாகும்" என்று கூறி பெண்கள் இயல்பாகவே தங்களது உடலை வெளிக்காட்டும் விருப்பம் கொண்டவர்கள், பெண்கள் முழுமையாக மறைக்க வேண்டும் என்ற முடிவினை இவர் கூறுகின்றார். இதற்கான காரணமாக "ஆண்களின் உள்ளங்களை ஆட்டிப்படைக்கும் விதத்தில் அவள் வேட்டைக்காரியாகவும் ஆண் இரையாகவும் இருக்கின்றான்" எனவும் குறிப்பிடுகின்றார்.

அஹமட் இர்ஷாட் என்பவர் ''ஆடை அணிந்தும் விபச்சாரியாக மாறும் பெண்கள்'' எனும் தனது ஆய்வுக் கட்டுரையில் ''சில சகோதரிகள் ஹபாயாவை அணிந்து கொண்டு தலையை மறைத்து ஒரு ஹிஜாப் / பர்தா அணியாமல் New fashion என்று சொல்லிக்கொண்டு Sowl (சோல்) அணிகின்றார்கள். இங்கு அவர்களது மறைக்கப்பட வேண்டிய தலைமுடி மற்றும் தாம் அணியும் ஆபரணங்கள் அனைத்தும் கவர்ச்சிகரமாக வெளியில் தெரிகின்றன'' என்று கூறி இந்த நிலமைகள் சீர் செய்யப்பட்டு சிறந்த இஸ்லாமிய ஆடைக்கலாச்சாரம் பெண்கள் மத்தியில் பேணப்பட வேண்டும் என்பதை தனது முடிவாக முன்வைக்கின்றார்.

Moulana Syed Jalaludin Umari என்பவர், ''பெண்களும் இஸ்லாமும்'' என்ற தனது புத்தகத்தில் ''பெண்களின் ஹிஜாபை பொறுத்தவரை ஷரீஅத் ஒளியில் செல்ல வேண்டுமெனில், அவளுடைய முழு உடலும் மறைக்கப்பட வேண்டும். அவன் தன்னுடைய உடலின் எந்தவொரு பகுதியையும் மஹ்ரமல்லாத பிற ஆண்களுக்கு முன்னால் வெளிப்படுத்தவே கூடாது'' என்று கூறி இஸ்லாமிய ஆடைக் கலாச்சாரத்தைப் பேணி முழு உடலும் மறையும் படி பெண்கள் ஆடை அணிய வேண்டும் என தனது முடிவினை முன்வைக்கின்றார்.

சுரையா ஜுனைத் சத்தார் என்பவர் அல்ஹஸனாத் சஞ்சிகையில் வெளிவந்த ''நானும் ஹபாயா உடுத்தனும்'' எனும் தனது கட்டுரையில் ''பெண்களின் இஸ்லாமிய ஆடையானது ஹலாலான உழைப்பில் பெறப்பட்டதாகவும், கனமானதாகவும், இறுக்கமற்றதாகவும், தளர்வானதாகவும், ஆண்களின் உடையை ஒத்ததாகவோ / அன்னிய பெண்களின் உடையை ஒத்ததாகவோ இருக்கக் கூடாது எனவும், மணம் பூசப்பட்டதாகவோ, கவர்ச்சிகரமானதாகவோ இருக்கக் கூடாது'' என்று கூறி இஸ்லாம் பெண்களின் ஆடை தொடர்பாக மேற்கூறப்பட்ட வரையறைகளை இட்டுள்ளது. அதன் பிரகாரமே பெண்கள் தமது ஆடையை அணிய வேண்டும் என தன் கருத்தினை முன்வைக்கின்றார்.

ஷிஹானா ஜுனைதீன் என்பதை ''உண்மை உதயம்'' சஞ்சிகையில் வெளிவந்த ''இஸ்லாமிய பெண்ணும் ஆடையும்'' எனும் தனது கட்டுரையில் ''முஸ்லிம் மாணவிகள் வெளியில் செல்லும் போது இறுக்கமான ஆடை அணிந்து fashion என்ற வகையில் இரு கால்களுக்கிடையே வெட்டுகள் வைத்த ஆடைகளை அணிந்து செல்கிறார்கள்'' என்று கூறி முஸ்லிம் இளம் பெண்களின் ஆடைக் கலாச்சாரம் சீரழிவெதற்கெதிரான தனது கருத்தினை முன்வைக்கின்றார்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக 1ம் மற்றும் 2ம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டன.

**முதலாம் நிலைத் தரவுகள்**

150 வினாக்கொத்துக்கள் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிடையே வினியோகிக்கப்பட்டன. மார்க்க அறிஞர்கள், கல்விமான்கள் மற்றும் சமூக நலன்விரும்பிகள் போன்றோரிடம் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் மூலம் தரவுகள் பெறப்பட்டன.

**இரண்டாம் நிலைத்தரவுகள்**


இவ்வாய்வுக்கான இரண்டாம் நிலைத்தரவுகளாக

- சஞ்சிகைகள்
- நூல்கள்
- அல்குர்ஆன்
- ஹதீஸ்
- ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

போன்றன பயன்படுத்தப்பட்டன.

**தரவுப் பகுப்பாய்வு**


பிரதேசத்தில் ஆடைகளின் பயன்பாட்டு முறைகள்




மூலம் வினாக்கொத்து

வினாக்கொத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அக்கரைப்பற்று மாநகர சபையில் 45 சதவீதம் டெனிம் மற்றும் டொப் எனும் ஆடையும், 35 சதவீதம் ஹபாயாவும், 10 சதவீதம் சல்வார் ஆடையும், 10 சதவீதம் சிலீம் பிற் ஜீன்ஸ் ஆடையும் பயன்படுத்தப்படுகின்றமை முடிவுகளாக பெறப்பட்டுள்ளது.

ிரதேசத்தில் நடைமுறையிலுள்ள ஆடைகள்




மூலம் வினாக்கொத்து

வினாக்கொத்துக்களின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளில் 65 சதவீதமான ஆடைகளானது ஆடம்பரமான ஆடைகளாகவும், 20 சதவீத ஆடைகள் நடுத்தர ஆடைகளாகவும், மற்றும் 15 சதவீதமான ஆடகள் சாதாரணமான ஆடைகளாகவும் இளம் பெண்களிடையே நடைமுறையில் உள்ளதை இனங்காட்டுகின்றது.

**முடிவுரையும் கலந்துரையாடலும்**

வினாக்கொத்தின் தரவுகளின் அடிப்படையில் நோக்கும் போது, இவ்வாய்வின் கருதுகோளானது அதிகளவு பண்புரீதியானவைகளாகவே காணப்படுகின்றது. இன்னும் பகுப்பாய்வின் அடிப்படையில் உண்மைப்படுத்தப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம். எனவே அக்கரைப்பற்று மாநகர சபையில் இளம் பெண்கள் மத்தியில் காணப்படும் இஸ்லாமிய ஆடைக்கலாச்சாரமானது சீரழிவினை நோக்கியும் வரையறைகளை மீறியும் காணப்படுகின்றன. அந்த வகையில் இப்பிரதேச இளம்பெண்கள் மத்தியில் டெனிம்டொப் மற்றும் சிலிம் பிட் ஜீன்ஸ் என்பன 80 வீதம் மாணவர்கள் மத்தியில் பயன்பாட்டில் உள்ளது. மேலும் நடைமுறையிலும் கூட 65 வீத மாணவர்கள் ஆடம்பரமான ஆடைகளையே விரும்புகிறார்கள். இதனடிப்படையில் அக்கரைப்பற்று மாநகரசபையில் இளம்பெண்களிடம் காணப்படுகின்ற ஆடைக்கலாச்சரத்தில் மார்க்கத்தின் பின்பற்றல் மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. எனவேதான் இவற்றிலிருந்து இவர்களை மீட்டு இஸ்லாமிய ஆடைபற்றிய தெளிவினையும், மாற்றத்தினையும் உருவாக்குவதற்கு மேலே கூறிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் இஸ்லாமிய வரையறைகளை பேணிய அடிப்படையில் தங்கள் ஆடைக்கலாசாரத்தைப் பேணிக்கொள்ளும் இளம் முஸ்லிம் பெண்கள் சமுதாயத்தை அவதானிக்கலாம் என்பது புலனாகின்றன.

**முன்மொழிவுகள்/பரிந்துரைகள்**

- சிறிய வயதில் இருந்தே இஸ்லாமிய சூழலில் பெண் பிள்ளைகளை வளர்ததல்.
- இஸ்லாமிய சட்டதிட்டம், வரையறைகள். ஒழுக்கம் பற்றி சொல்லிக் கொடுத்தல்.
- விற்பனையாளர்களுக்கு ஆடைபற்றிய தெளிவினை ஊட்டல். மார்க்கத்தின் வரையறைகளை மீறிய ஆடை விற்பனையை தவிர்க்கும் படி கூறல்.
- பெற்றோர்கள், சகோதரர்கள் போன்றோர் தங்கள் வீட்டு பெண்பிள்ளைகளின் ஆடைக்கலாச் சாரத்தில் கண்ணும் கருத்துமாக இருத்தல்.
- இஸ்லாமிய ஆடைக்கலாச்சாரத்தின் தேவை, அவசியம் பற்றி முஸ்லிம் இளம் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- இஸ்லாமிய ஆடைக்காலாச்சாரத்தை மீறுவதனால் எவ்வாறான விளைவுகள் ஏற்படும் என்பதனை எத்திவைத்தல். ஆடை சம்பந்தமான அறிவுரை நிகழ்வினை அடிக்கடி நிகழ்த்துதல்.

**உசாத்துணைகள்**


1. Annelies Moors, (2005)., *Muslim fashions- fashionable Muslims,* paper presented at the ISIM, USA. Retrieved from https://www.researchgate.net/publication.
2. Ayathullah,M.M., (1996)., "இஸ்லாமிய ஹிஜாப்", Islamic Services Organization,Colombo - 02.
3. Moulana Umari, S,J., (2010)., "பெண்களும் இஸ்லாமும்", Islamic Foundation Trust, Perambur, Chennai.
4. சுரையா, ஜ".,ச., (2007 ஏப்ரல்)., "நானும் ஹபாயா உடுக்கனும்" அல் ஹஸனாத் மலர்-33 இதழ்-04, அக்குரணை.
5. 'ஷிஹானா, ஜ"., (2010 பெப்ரவரி), "இஸ்லாமியப் பெண்ணும் ஆடையும்", உண்மை உதயம், மாவடிச்சேனை.
6. அஹமட் இர்ஷாட்.,(2014 September)., "ஆடை அணிந்தும் விபச்சாரியாக மாறும் பெண்கள்". Retrieved from http://srilankamuslims.lk/photo-